**கவனிக்க.**-2021.12.10 ஆந் திகதிய 2258 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I: தொகுதி III மற்றும் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2259 - 2021 දෙසැම්බර් මස 17 වැනි සිකුරාදා - 2021.12.17

2259ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 1030 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 1038 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2022, சனவரி மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, திசெம்பர் மாதம் 24ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

1029 - B 082297 - 353 (2021/12)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

## காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் (104 ஆம் உட்பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், முந்தல் பிரதேச செயலகப் பிரிவின், பிரதேச செயலாளர் ஜே.ஏ. விஜானி வசந்திகா ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதி யினால் 1997.11.12 ஆந் திகதி வழங்கப்பட்ட இலக்கம் புத்/பிர 27724 எனும் இலக்கத்தைக் கொண்ட அளிப்பு பத்திரமானது, உரிமையாளரான கீர்த்திசிங்கமையில் வசிக்கும் உடுமலகல உடுவிட்டிகே பிரியதர்சிகா நாணயக்காரவுக்கு வழங்கப்பட்ட புத்தளம் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் LDO 45/210 இன் கீழ் 1995.11.15 ஆந் திகதி பதிவு செய்யப்பட்ட உப பிரிவில் காட்டப்பட்டுள்ளபடி கீழ் வரும் உப அட்டவணையின் படி காணிக்கு பின்னுரித்தாளியாவதற்கு விருப்பமின்மை காரணமாக பின்னுரித்தாளர் ஒருவரை நியமிப்பதற்கு எவரும் இல்லாதிருப்பதால் அந்த அளிப்பு பத்திரத்தினை மேற்குறிப்பிட்ட சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதென்பதை இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2022.01.03 ஆந் திகதிக்கு முன்பதாக தெரியப்படுத்தல் வேண்டும்.*

**அட்டவணை**

*புத்தளம் நிருவாக மாவட்டத்தின், முந்தல் பிரதேச செயலகப் பிரிவின், புத்தளம் பற்றுவின் கோரளை மதுரங்குளி கிராம அலுவலர் பிரிவில் கீர்த்திசிங்ககம எனும் ஊரில் அமைந்துள்ள காணியானது இரண்டு றூட் விஸ்தீரணம் கொண்டதுமான பின்வரும் எல்லைகளையுடைய அரச காணி.*

வடக்கு : பிரதான வீதி;
கிழக்கு : கே.ஜி.நிமலுடைய காணி;
தெற்கு : குவின்டஸ்கடை காணி;
மேற்கு : நடைபாதை.

ஜே.ஏ. விஜானி வசந்திகா,
பிரதேச செயலாளர்,
முந்தல்.

பிரதேச செயலகம்,
முந்தல்,
*2021.07.12.*

*12- 459/1*

---

## காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் (104 ஆம் உட்பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், ஆராச்சிக்கட்டுவ பிரதேச செயலகப் பிரிவின், உதவி பிரதேச செயலாளர் டப். ஏ.எஸ். சீ.ஜீ. ஜான்ஸ ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதியினால் 1996.03.29 ஆந் திகதி வழங்கப்பட்ட இலக்கம் புத்/ ஆர / பிர/ 29284 எனும் இலக்கத்தைக் கொண்ட அளிப்பு பத்திரமானது, உரிமையாளரான பங்கதெனிய, கம்களேவில் வசிக்கும் வீரசிங்க மூலாசாரகே ஜுவன் நைதேக்குவுக்கு வழங்கப்பட்ட சிலாபம் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் ஆர 21/95 இன் கீழ் 1996.10.10 ஆந் திகதி பதிவு செய்யப்பட்ட உப பிரிவில் காட்டப்பட்டுள்ள காணிக்கு பின்னுரித்தாளியாவதற்கு சட்டரீதியாக உரித்தான நபர் இன்றியோ அல்லது உரித்தானவர் இருப்பினும் அவர் பின்னுரித்தாளராவதற்கு விருப்பமின்மை காரணமாக பின்னுரித்தாளர் ஒருவரை நியமிப்பதற்கு எவரும் இல்லாதிருப்பதால் அந்த அளிப்பு பத்திரத்தினை மேற்குறிப்பிட்ட சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதென்பதை இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2022.01.03 ஆந் தினத்திற்கு முன்பதாக எனக்கு தெரியப்படுத்த வேண்டும்.*

**அட்டவணை**

புத்தளம் நிருவாக மாவட்டத்தின், ஆரச்சிக்கட்டுவ பிரதேச செயலகப் பிரிவில் முன்னேஸ்வரம் பற்றுவின் கோரளை வீரகுமன்தளுவ கிராம அலுவலர் பிரிவில் கம்களே எனும் ஊரில் அமைந்துள்ளதும்----- ஆகியவரின் பொறுப்பின் கீழுள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டதுமான இலக்கம் -------கொண்ட கள பத்திரத்தில் ----இனால் தயாரிக்கப்பட்ட இலக்கம் பு 3492 ஆம் காணித்துண்டாடல் வரைபடத்தின் --- இனால் தயாரிக்கப்பட்ட ------ஆம் இலக்க இரேகை வரைபடத்தின் 12 ஆம் இலக்க காணித்துண்டாகக் காட்டப்படுவதுமான அளவில் பூச்சியம் தசம் மூன்று ஒன்பது ஆறு பூச்சியம் (0.3960 ஹெக்.) விசாலம் கொண்டதுமான பின்வரும் எல்லைகளையுடைய அரசகாணி.

வடக்கு : பு. 3492 இன் துண்டிலக்கம் 11 மற்றும் 02;
கிழக்கு : மு.பி.4845/ 2;
தெற்கு : பு 3492 இன் துண்டிலக்கம் 17;
மேற்கு : பு 3492 இன் துண்டிலக்கம 02 பிரதேச சபை பாதை.

டப். ஏ.எஸ். சீ.ஜீ. ஜான்ஸ,
பிரதேச செயலாளர்,
ஆரச்சிக்கட்டுவ.

பிரதேச செயலகம்,
ஆரச்சிக்கட்டுவ,
2019.02.20.

12- 459/2

---

இணைப்பு 9

**காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் (104 ஆம் உட்பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், வென்னப்புவ பிரதேச செயலகப் பிரிவின், பிரதேச செயலாளர் யு. எஸ். என். பர்னாந்து ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட் பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதியினால் 1995.11.06 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள புத்/வென்/ப்ர/23637 ஆம் இலக்க அளிப்பு பத்திரத்தினை அதன் உரிமையாளரான லுணுவில கிரிமெட்டியானவத்த எனும் முகவரியில் வசிக்கும் மிகிந்துகுல சூரிய கல்யான ப்ரசன்ன பெரேரா என்பவருக்கு கையளிக்கப்பட்டு மாரவில மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் புத்/ வென்/ 21/92 ஆம் இலக்கத்தின் கீழ் 1995.12.12 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையாளர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்கவிரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2022.01.03 ஆந் தினத்திற்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

புத்தளம் நிருவாக மாவட்டத்தின், வென்னப்புவ பிரதேச செயலாளர் பிரிவின் தெற்கு பிடிகல் கோரளே கிழக்கு லுணுவில கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த லுணுவில எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு 52/ 13/1 மற்றும் இலக்கம் 2 ஆம் இலக்க வெளிக்களத் தாளில் / புத்தளம் நில அளவையாளர் அத்தியட்சகர் என்பவரால் தயாரிக்கப்பட்டு மு.பி.பு. 3363 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் இரேகை வரைதலில் 45 ஆம் இலக்க காணித்துண்டெனக் காட்டப்பட்டுள்ளதும் 0.026 ஹெக்டேயர் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு.

வடக்கு : காணித்துண்டிலக்கம் 44மற்றும் 43;
கிழக்கு : காணித்துண்டிலக்கம் 46மற்றும் 57;
தெற்கு : காணித்துண்டிலக்கம் 58;
மேற்கு : லுணுவில தொடக்கம் வீடு வரையிலான பாதை.

யூ.எஸ். என். பெர்னான்டோ,
பிரதேச செயலாளர்,
வென்னப்புவ.

பிரதேச செயலகம்,
வென்னப்புவ,
2020.10.06.

12- 459/3

---

இணைப்பு 9

**காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் (104 ஆம் உட்பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

வடமேல் மாகாண சபையின் புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள நவகத்தேகம பிரதேசச் செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் ( மாகாணங்களுக்கு இடைப்பட்ட ) ஆகிய ஹர்ஷன ஜயசிறி ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4)3 ஆம் உட்பிரிவின் கீழ், அதிஉத்தமாராம் சனாதிபதி அவர்களால் 1996, ஆவணி மாதம் 06 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள புத்/ நவ/ப்ர/ 44913 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான வெலேவெவ , நவகத்தேகம எனும் முகவரியில் வசிக்கும் ஹேரத் முதியங்சேலாகே பியசேன கருணாவதி என்பவருக்கு கையளிக்கப்பட்டு புத்தளம் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் எல்.டி.ஒ. 269/ 30 ஆம் இலக்கத்தின் கீழ் 2005, புரட்டாசி 14 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2022.01.14 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

புத்தளம் நிருவாக மாவட்டத்தின், நவகத்தேகம பிரதேச செயலாளர் பிரிவின் கிரிமெட்டியாவ பற்றில் /கோரளையிலுள்ள 646-2/ வெலேவெவ தெற்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த வெலேவெவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு இறுதிக் கிராம வரைபட இல. 3216 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் இரேகை வரைதலில் 663 ஆம் இலக்க காணித்துண்டெனக் காட்டப்பட்டுள்ளதும் 0.212 ஹெக்டேயர் விசஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு.

வடக்கு : துண்டு இல. 662 மற்றும் 653;
கிழக்கு : துண்டு இல. 662 மற்றும் சாலை ஒதுக்கு;
தெற்கு : துண்டு இல. 664 மற்றும் 665;
மேற்கு : துண்டு இல. 664 மற்றும் 653.

ஹர்ஷன ஜயசிறி,
பிரதேச செயலாளர்,
வென்னப்புவ.

பிரதேச செயலகம்,
வென்னப்புவ,
2021, சனவரி 22.

12- 459/4

## காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் (104 ஆம் உட்பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், முந்தல் பிரதேச செயலகப் பிரிவின், பிரதேச செயலாளர் ஜே.ஏ. விஜானி வசந்திகா ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதி யினால் 1986.07.02 ஆந் திகதி வழங்கப்பட்ட இலக்கம் புத்/ பிர 6654 எனும் இலக்கத்தைக் கொண்ட அளிப்பு பத்திரமானது, உரிமையாளரான நவதந்குளம், மங்களஎலியவில் வசிக்கும் லியனகே சிமியொன் அப்புகாமியிற்கு வழங்கப்பட்ட புத்தளம் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் LDO 8/247 இன் கீழ் 1989.04.19 ஆந் திகதி பதிவு செய்யப்பட்ட உப பிரிவில் காட்டப்பட்டுள்ளபடி கீழ் வரும் உப அட்டவணையின் படி காணிக்கு பின்னுரித்தாளியாவதற்கு விருப்பமின்மை காரணமாக பின்னுரித்தாளர் ஒருவரை நியமிப்பதற்கு எவரும் இல்லாதிருப்பதால் அந்த அளிப்பு பத்திரத்தினை மேற்குறிப்பிட்ட சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதென்பதை இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2022.01.03 ஆந் திகதிக்கு முன்பதாக தெரியப்படுத்தல் வேண்டும்.*

**அட்டவணை**

*புத்தளம் நிருவாக மாவட்டத்தின், முந்தல் பிரதேச செயலகப் பிரிவின், புத்தளம் பற்றுவின் கடவன்பத்து, 610/ பீ நவதந்குளம் கிராம அலுவலர் பிரிவில் நவதந்குளம் எனும் ஊரில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டதுமான இலக்கம் பீ.பீ.பு. 163 ஐக் கொண்ட கள பத்திரத்தில் இலக்கம் 39 இல் தயாரிக்கப்பட்ட காணித்துண்டால் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதுமான அளவில் 2 ஏக்கர் 23பேர்ச் விசாலம் கொண்டதுமான பின்வரும் எல்லைகளையுடைய அரச காணி.*

வடக்கு : அரச வன பகுதி( அரசுக்கு சொந்தமான வன பகுதி);
கிழக்கு : அரச வன பகுதி( அரசுக்கு சொந்தமான வன பகுதி);
தெற்கு : பாதை;
மேற்கு : அரச வன பகுதி( அரசுக்கு சொந்தமான வன பகுதி).
.

ஜே.ஏ. விஜானி வசந்திகா,
பிரதேச செயலாளர்,
முந்தல்.

பிரதேச செயலகம்,
முந்தல்,
*2020.11.11.*

*12- 459/5*

---

## காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் (104 ஆம் உட்பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், ஆராச்சிக்கட்டுவ பிரதேச செயலகப் பிரிவின், உதவி பிரதேச செயலாளர் டப். ஏ.எஸ். சீ.ஜீ. ஜான்ஸ ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதியினால் 1987.01.29 ஆந் திகதி வழங்கப்பட்ட இலக்கம் புத்/ பிர / 8238 எனும் இலக்கத்தைக் கொண்ட அளிப்பு பத்திரமானது, உரிமையாளரான வைரங்கட்டில் வசிக்கும் நுகேகொடகே தோமஸ் சில்வாவுக்கு வழங்கப்பட்ட சிலாபம் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் ஆர 5/541 இன் கீழ் 1991.09.27 ஆந் திகதி பதிவு செய்யப்பட்ட உப பிரிவில் காட்டப்பட்டுள்ள காணிக்கு பின்னுரித்தாளியாவதற்கு சட்டரீதியாக உரித்தான நபர் இன்றியோ அல்லது உரித்தானவர் இருப்பினும் அவர் பின்னுரித்தாளராவதற்கு விருப்பமின்மை காரணமாக பின்னுரித்தாளர் ஒருவரை நியமிப்பதற்கு எவரும் இல்லாதிருப்பதால் அந்த அளிப்பு பத்திரத்தினை மேற்குறிப்பிட்ட சட்டத்தின் 104 ஆம் பிரிவின்கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதென்பதை இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2022.01.03 ஆந் தினத்திற்கு முன்பதாக எனக்கு தெரியப்படுத்த வேண்டும்.*

**அட்டவணை**

*வடமேல் மாகாணத்தில் புத்தளம் நிருவாக மாவட்டத்தின், ஆரச்சிக்கட்டுவ பிரதேச செயலகப் பிரிவில் ஆனவிழுந்தான் பற்றுவின் ஆரச்சிக்கட்டுவ கிராம அலுவலர் பிரிவில் வைரங்கட்டு எனும் ஊரில் அமைந்துள்ளதும் அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டதுமான இலக்கம் பிபிபு 2567 ஆம் இலக்க காணித்துண்டாடல் இரேகை வரைபடத்தின் 12 ஆம் இலக்க காணித்துண்டாகக் காட்டப்படுவதுமான அளவில் இரண்டு தசம் பூச்சியம் நான்கு ஏழு அளவில் (2.047 ஹெக்.) விசாலம் கொண்டதுமான பின்வரும் எல்லைகளையுடைய அரசகாணியாக வைரன்கட்டு காடு என பெயரிடப்படுகிறது.*

*வடக்கு : துண்டிலக்கம் 01 மற்றும் 131 பாதை;*
*கிழக்கு : துண்டிலக்கம் 131 பாதை;*
*தெற்கு : துண்டிலக்கம் 14;*
*மேற்கு : துண்டிலக்கம் 146 பாதை.*

*டப். ஏ.எஸ். சீ.ஜீ. ஜான்ஸ,*
*பிரதேச செயலாளர்,*
*ஆரச்சிக்கட்டுவ.*

*பிரதேச செயலகம்,*
*ஆரச்சிக்கட்டுவ,*
*2021.01.22.*

*12- 459/6*

---

**காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் (104 ஆம் உட்பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

*வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், முந்தல் பிரதேச செயலகப் பிரிவின், பிரதேச செயலாளர் ஜே.ஏ. விஜானி வசந்திகா ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதி யினால் 1987.07.03 ஆந் திகதி வழங்கப்பட்ட இலக்கம் புத்/ பிர 8550 எனும் இலக்கத்தைக் கொண்ட அளிப்பு பத்திரமானது, உரிமையாளரான சந்தித் தோட்டத்தில் வசிக்கும் கிரிபண்டா ஆராச்சிலாகே தொண் மல்லிகா ஜெசின்தாவுக்கு வழங்கப்பட்ட சிலாபம் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் LDO 2/ ஆ/ 209 இன் கீழ் 1990.03.06 ஆந் திகதி பதிவு செய்யப்பட்ட உப பிரிவில் காட்டப்பட்டுள்ளபடி கீழ் வரும் உப அட்டவணையின் படி காணிக்கு பின்னுரித்தாளியாவதற்கு விருப்பமின்மை காரணமாக பின்னுரித்தாளர் ஒருவரை நியமிப்பதற்கு எவரும் இல்லாதிருப்பதால் அந்த அளிப்பு பத்திரத்தினை மேற்குறிப்பிட்ட சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதென்பதை இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2022.01.03 ஆந் திகதிக்கு முன்பதாக தெரியப்படுத்தல் வேண்டும்.*

**அட்டவணை**

*புத்தளம் நிருவாக மாவட்டத்தின், முந்தல் பிரதேச செயலகப் பிரிவின், ஆனவிழுந்தாவ பற்றுவின் கோரளை 593, புளிச்சாக்குளம் கிராம அலுவலர் பிரிவில் சந்தி தோட்டம் எனும் ஊரில் அமைந்துள்ளதும் இலக்கம் மு/பி/ பு 2702 ஆம் காணித்துண்டாடல் வரைபடத்தின் 40 ஆம் இலக்க காணித்துண்டாகக் காட்டப்பட்டதுமான அளவில் பூச்சியம் தசம் பூச்சியம் ஒன்பது ஏழு ஹெக்டயார் ( 0.097ஹெக்.) விசாலம் கொண்டதுமான பின்வரும் எல்லைகளையுடைய அரச காணி.*

வடக்கு : துண்டிலக்கம் 10 மற்றும் 11 இன் ஒரு பகுதி;
கிழக்கு : துண்டிலக்கம் 39;
தெற்கு : துண்டிலக்கம் 54 பாதை;
மேற்கு : துண்டிலக்கம் 54 பாதை.

.

ஜே.ஏ. விஜானி வசந்திகா,
பிரதேச செயலாளர்,
முந்தல்.

பிரதேச செயலகம்,
முந்தல்,
2021.02.04.

12- 459/7

---

**காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்படும் வழங்கற் பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் உட்பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

மத்திய மகாணத்தில், மாத்தளை நிருவாக மாவட்டத்தில் கலேவெல பிரதேச செயலாளர் பிரிவில் யட்டவத்த பிரதேச செயலாளர் டீ.ஆர்.கே. ஹென்நாயக்க ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் 1982.02.26 ஆந் திகதி வழங்கப்பட்ட இலக்கம் மாதளே/ பிர/ 115 கொண்ட வழங்கற் பத்திரத்தின் உரித்தாளரான, இல. 40, தூல்லேவ 1, வாலவெல இல் வதியும் திரு. மீரா லெப்பே மொகமட் ஹனிபா வுக்கு கையளிக்கப்பட்ட, மாத்தளை மாவட்டப் காணிப்பதிவாளர் அலுவலகத்தின் இலக்கம் து/5/07 இன் கீழ் 1982.09.06 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின் உரித்தாளராவதற்கு சட்டரீதியான உரித்தாளரொருவர் இல்லாததனால் அல்லது உரித்தாளரொருவர் இருந்தாலும் அவர் பின்னுரித்தாளராவதற்கு விருப்பமின்மையினால் பின் உரித்தாளரொருவராவதற்கு யாரும் இல்லையென்ற விபரம் கிடைக்கப் பெற்றுள்ளதனால் குறித்த வழங்கற்பத்திரம் மேற்குறித்த சட்டத்தின் 104 ஆம் பிரிவின்கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதென்பதனை இத்தால் அறிவிக்கின்றேன். இது தொடர்பாக ஏதும் ஆட்சேபனைகள் இருப்பின் அவற்றை 2022.01.03 ஆந் திகதிக்கு முன்னதாக எழுத்து மூலம் எனக்கு அறிவித்தல் வேண்டும்.

**அட்டவணை**

மாத்தளை நிருவாக மாவட்டத்தில் யட்டவத்த பிரதேச செயலாளர் பிரிவில் அஸ்கிரி உடசிய பத்துவில் தூல்லேவ கிராம அலுவலர் பிரிவில் தூல்லேவ கிராமத்தில் அமைந்துள்ள மாத்தளை நில அளவையாளர் அத்தியட்சகரின் பொறுப்பில் இருக்கின்ற, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட வெளிக்கள பத்திர இலக்கம் 15/ 36 இல் வரைபட இலக்கம் பூ.வ.மா/110 கொண்ட வரைபடத்தில் 40 ஆம் இலக்க காணித்துண்டெனக் காட்டப்பட்டுள்ள 02 றூட், விஸ்தீரணம் கொண்ட அரச காணி- தூல்லேவ 1 குடியேற்றம் எனும் காணித்துண்டின் எல்லைகள்:

துண்டு இல. 40
வடக்கு : கால்வாய் ( துண்டு இல.37);
கிழக்கு : துண்டு இல. 42;
தெற்கு : துண்டு இல.41;
மேற்கு : ஒற்றையடிப்பாதை துண்டுஇல. 39.

டீ.ஆர்.கே. ஹெென்நாயக்க,
பிரதேச செயலாளர்,
யட்டவத்த.

பிரதேச செயலகம்,
யட்டவத்த,
2021.01.06.

12- 522/1

## காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*மத்திய மாகாண சபையின் மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ள கலேவெல பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர்/ மாகாணங்களுக்கிடைப்பட்ட பிரதிக் காணி ஆணையாளர் மொனரவில கசுன் பிரபாத் ஆரியரத்ன ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆவது உட்பிரிவின் கீழ், அதிமேதகு சனாதிபதி அவர்களினால் 1988.09.30 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மாத்தளை/பிர/8895 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான கலேவெல, ஹொம்பாவ எனும் முகவரியில் வசிக்கும் ராஜமுனி தேவயலாகே ஹெரானிஸ் என்பவருக்கு கையளிக்கப்பட்டு, மாத்தளை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் ஹொ/281/578/90 ஆம் இலக்கத்தின்கீழ் 1990.10.19 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையாளர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிப்பப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பில் ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2022.01.03 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.*

### அட்டவணை

*மாத்தளை நிருவாக மாவட்டத்தில் கலேவெல பிரதேச செயலாளர் பிரிவின் கந்தபல்ல கோரளேயில் உள்ள பெலிகமுவ கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ஹோம்பாவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளரினால் இடப்பட்ட அவர் பொறுப்பிலுள்ள வெளிப்பத்திர இல. க.சி. 335 இன் காணி வரைபட இல. 566 மற்றும் 570 இற்கு அமைய 0.810 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதும், கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு : ஹோம்பாவ ஜனபதய.*

*துண்டு இல. 566(0.040 ஹெக்டயார்)*

*வடக்கு : துண்டு இல. 565 மற்றும் 569;*
*கிழக்கு : துண்டு இல. 565 மற்றும் 546;*
*தெற்கு : துண்டு இல.546, 570 மற்றும் 291 1/2;*
*மேற்கு : துண்டு இல. 570 மற்றும் 569.*

*துண்டு இல. 570 (0.770 ஹெக்டயார்)*

*வடக்கு : துண்டு இல. 569 மற்றும் 505;*
*கிழக்கு : துண்டு இல. 566, 565, 291 1/2 மற்றும் 571;*
*தெற்கு : துண்டு இல.571, 291 1/2 மற்றும் 36;*
*மேற்கு : துண்டு இல. 36,33,62 மற்றும் 569.*

எம்.கே.பி. ஆரியரத்ன,
பிரதேச செயலாளர் /பிரதிக் காணி ஆணையாளர்
(மாகாணங்களுக்கிடையிலான).

பிரதேச செயலகம்,
கலேவெல,
*2021.02.23.*

*12- 522/2*

---

## காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*மத்திய மாகாண சபையின் மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ள கலேவெல பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர்/ மாகாணங்களுக்கிடைப்பட்ட பிரதிக் காணி ஆணையாளர் மொனரவில கசுன் பிரபாத் ஆரியரத்ன ஆகிய நான்,*

*காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆவது உட்பிரிவின் கீழ், அதிமேதகு சனாதிபதி அவர்களினால் 1986.02.10 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மாத்தளை/ பிர/ 6291 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான தேவஹுவ மகுல்கஸ்வெவ எனும் முகவரியில் வசிக்கும் ஜயவீர வர்தனகே லீலாவதி என்பவருக்கு கையளிக்கப்பட்டு, மாத்தளை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் வெ/ 132/ 1499/87 ஆம் இலக்கத்தின் கீழ் 1987.09.24 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையாளர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிப்பப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பில் ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2022.01.03 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.*

**அட்டவணை**

*மாத்தளை நிருவாக மாவட்டத்தில் கலேவெல பிரதேச செயலாளர் பிரிவின் கந்தபல்ல பத்துவே/கோரளையில் உள்ள மகுல்கஸ்வெவ கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த வெடகொலுவெவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளரினால் இடப்பட்ட அவர் பொறுப்பிலுள்ள இல. எப் 59/ 25 இன் வெளிப்பத்திர இல. க.சி.382 இன் காணி வரைபட இல. 407 இற்கு அமைய 03 றூட் 29 பேர்ச் விஸ்தீரணமுள்ள, கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு: வெடகொலுவெவ ஜனபதய.*

*வடக்கு : துண்டு இல. 408 மற்றும்180 1/2;*
*கிழக்கு : துண்டு இல. 391 ( பாதை);*
*தெற்கு : துண்டு இல.406;*
*மேற்கு : துண்டு இல. 409, 404 மற்றும் 92.*

*(இல.க.சி.382 இன் துண்டு இல. 407 காணி வரைபடம் இணைக்கப்பட்டுள்ளது.)*

*எம்.கே.பீ. ஆரியரத்ன,*
*பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர்,*
*(மாகாணங்களுக்கிடையிலான).*

*பிரதேச செயலகம்,*
*கலேவெல,*
*2021.02.04.*

*12- 522/3*

---

**காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை நீக்குதல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

*மத்திய மாகாண சபையின மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ள உக்குவளை பிரதேச செயலாளர் பிரவின் பிரதேச செயலாளர் எஸ். என்.கே.சேரசிங்ஹ ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆவது உட்பிரிவின் கீழ், அதிமேதகு சனாதிபதி அவர்களினால் 1983.08.31 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மாத்தளை/ பிர/ 1762 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான மாத்தளை, புரிஜ்ஜல, வரகாமுர, பீ குடியிருப்பு , 31 ஆம் இலக்கம் எனும் முகவரியில் வசிக்கும் வீரப்புலி மஹரதாகே எட்வின் என்பவருக்கு கையளிக்கப்படாமல் இவ் அலுவலகத்திலே நிறுத்தி வைத்து மாத்தளை மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்படாத, கீழ்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாவதற்கு சட்டரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையானவர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரிமையாளராக நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலாலர் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2022.01.03 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.*

**அட்டவணை**

*மத்திய மாகாணத்தில் மாத்தளை மாவட்டதில் உக்குவளை பிரதேச செயலகத்தில் மாத்தளை கொஹேன்சீய பத்துவே புரிஜ்ஜல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த வரகாமுர எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 54/ 3/2 (ஐ20/4) ஆம் இலக்க வெளிக்களத் தாளில் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட பி.பி.மா.658 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் 31 ஆம் இலக்க காணித்துண்டெனக் காட்டப்பட்டுள்ளதும் 0.109 ஏக்கர் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டதுமான அரச காணித்துண்டு.*

வடக்கு : துண்டு இல. *28*;
கிழக்கு : துண்டு இல. *30*;
தெற்கு : துண்டு இல.*34*;
மேற்கு : துண்டு இல. *04* ( பாதை).

எஸ். என்.கே. சேரசிங்ஹ,
பிரதேச செயலாளர்.

*பிரதேச செயலகம்,
உக்குவெல,
2020.11.04.*

*12- 522/4*

---

## நானாவித காணி அறிவித்தல்கள்

*காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/51903.
மாகாணக் காணி ஆணையாளரின் இல.
පළාත්/ඉකො/ඉ/කල්/දී/බ.*

### முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

*புத்தளம் மாவட்டம், கல்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 619, மாம்புரிய கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மாம்புரிய எனும் கிராமத்தில் நாவக்காடுவெல்ல மற்றும் மாம்புரியவெல்ல காணிகள் அமைந்துள்ளதும் பி.பி.பு. 4296ஆம் இலக்க சுவட்டு வரைபடத்தில் காணித்துண்டு 02 எனக் காட்டப்பட்டுள்ளதும் 1.336 ஹெக்டயார் மற்றும் எப்.வி.பி. 3283 ஆம் இலக்க சுவட்டு வரைபடத்தில் காணித்துண்டு 652 எனக் காட்டப்பட்டுள்ளதும் 4.0158 ஹெக்டயார் எனும் அரச காணிகள் விவசாய நோக்கத்திற்காக தருமாறு வர்ணகுலசூரிய பிரசாதி ஜனிதா லோவ் அவர்கள் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.*

*02.* விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

*பி.பி.பு.4296 ஆம் வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 02*

வடக்கு : மாம்புரிய;
கிழக்கு : பிரதேச சபை வீதி ;
தெற்கு : நாவக்காடு வெல்ல ;
மேற்கு : காணித்துண்டு இல. -*01* ( பிரதேச சபை வீதி).

*எப்.வி.பி.3283 வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 652*

வடக்கு : *588, 594* காணித்துண்டு மற்றும் பிரதேச சபை வீதி;
கிழக்கு : பிரதேச சபை வீதி ;
தெற்கு : நாவக்காடுவ கிராமம்;
மேற்கு : பிரதேச சபை வீதி மற்றும் காணித்துண்டு இல. *588.*

*03.* குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (*30*) வருடங்கள் (*2021.10.17* ஆந் திகதி தொடக்கம் முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை**.- பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட *2021* ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தி அடையாத சந்தைப் பெறுமதியின் நான்கு சதவீதம் வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இந்தக் குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும். மேலும் இத் திருத்தமானது முந்தைய தொகையில் 50% க்கு மேல் இருக்கக் கூடாது.

*தவணைப்பணம்*.- வருடாந்தக் குத்தகையின் மும்மடங்கு தொகை தவணைப் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

*தண்டப்பணம்.-* 2021 ஆம் வருடத்திற்கான அபிவிருத்தி செய்யப்படாத வர்த்தகப் பெறுமதியின் 10% தண்டப்பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

(ஆ) குத்தகைக்காரரினால் இக்காணி விவசாய நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படக் கூடாது;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் , மாகாணக் காணி ஆணையாளர்/பிரதிக் காணி ஆணையாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். ;

(ஈ) பிரதேச செயலாளர் /மாகாணக் காணி ஆணையாளர் செயற்திட்டம் தொடர்பான நிறுவனம் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை கட்டுப்படும் ;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2021.10.17ஆந் திகதியிலிருந்து குறைந்தது ஐந்து வருடங்களாகிலும் முடியும் வரை கீழ்க் குத்தகை அனுமதிக்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும் அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்.

04. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக் குத்தகை வழங்கப்படும்.

எஸ். ஏ. கலானி எம். தனசேகர,
பிரதிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2021, திசெம்பர் 27.

12- 458

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/65943.
மாகாணக் காணி ஆணையாளரின் இல. :என்சிபி/பிஎல்சி/எல்2 /தீகாப.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அநுராதபுரம் மாவட்டம், மத்யம நெகனஹிர நுவரகம் பலாத பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல.290, சுசியன்குளம கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த சுசியன்குளம எனும் கிராமத்தில் அமைந்துள்ள காணி அலுவலரினால் வரையப்பட்ட சுவட்டு வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 01 மற்றும் 01 ஏக்கர் 01 றூட் 34 பேர்ச் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை விவசாய நோக்கத்திற்காக குத்தகைக்குத் தருமாறு கேட்டு திரு.ஹேரத்கே நளின் அனுருத்த என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : பிசோமெனிகே என்பவரின் காணி மற்றும் வீதிக்கான ஒதுக்கு;
கிழக்கு : வீதிக்கான ஒதுக்கு;
தெற்கு : வீதிக்கான ஒதுக்கு ;
மேற்கு : பிசோமெனிகே என்பவரின் காணி மற்றும் வீதிக்கான ஒதுக்கு.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.-** முப்பது (30) வருடங்கள் (2021.03.25 ஆந் திகதி தொடக்கம் 30 வருடங்கள் முன்னோக்கி);

**வருடாந்தக் குத்தகை.-** 2021 ஆம் ஆண்டுக்கான காணியின் விலை பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் பெறுமதி ஐந்து மில்லியனுக்கு (ரூபா 5,000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில் காணியின் அபிவிருத்தி அடையாத பெறுமதியில் 2% மாண்புமிகு அமைச்சர் அனுமதித்த வருடத்திற்கான விலை மதிப்பீடு ரூபா ஐந்து மில்லியனுக்கு ( ரூ.5,000,000.00) அதிகாமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் அபிவிருத்தியடையாத பெறுமதியில் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபட வேண்டும். இந்த குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தப்படும் என்பதுடன் திருத்தப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்படும் குத்தகைப் பணத்தின் 20% வட்டி வருடாந்தக் குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

*தவணைப்பணம்.-* அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மாகாணக் காணி ஆணையாளர் / பிரதிக் காணி ஆணையாளரின் மனம் திருப்பதியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். ;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி விவசாய நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படக் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மாகாணக் காணி ஆணையாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை கட்டுப்படும் ;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

